RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 204 | ஜூலை.27 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை அவசியமில்லை: முத்தரசன்



சென்னை: ஜூலை.27-

தமிழ்நாட்டில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை அவசியமில்லை, வழக்கமான சுருக்கமுறை திருத்தம் போதுமானது என இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பெற்று, சுருக்க முறை திருத்தம் மேற்கொள்வது வழக்கமான நடைமுறையாகும். தற்போது, எந்தவித ஆலோசனையும் பெறாமல் வழக்கமான நடைமுறையை மாற்றி, சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையை அறிவித்திருப்பது சுதந்திரமான, நியாயமான, பக்கச் சார்பற்ற தேர்தல் நடைமுறைகளின் அடிப்படைகளை தகர்க்கும் செயலாகும்.

ஒன்றிய அரசின் அதிகாரத்தில் உள்ள பாஜகவும், அதன் கூட்டாளிகளும் மக்கள் செல்வாக்கை இழந்து வருவதன் காரணமாக, தலைமை தேர்தல் ஆணையர், ஆணையர்கள் தேர்வு செய்யும் குழு குறித்து, உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வின் உத்தரவை நிராகரித்து, தேர்தல் ஆணையர், ஆணையர்கள் தேர்வுக் குழுவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, பிரதமர், எதிர்கட்சித் தலைவர், பிரதமரால் நியமிக்கப்படும் ஒன்றிய அமைச்சர் ஒருவர் என சட்டத் திருத்தம் செய்து, ஆளும் கட்சியின் தலையீட்டுக்கு வழி அமைத்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, வரும் தேர்தலில் ஆளும் தரப்புக்கு ஆதரவாக தேர்தல் முடிவுகளை அமைத்துக் கொள்ளும் வகையில் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் வாக்காளர் பட்டியலை தங்களுக்கு சாதகமாக தயாரித்துக் கொள்ளும் குறுக்கு வழி செயலில் இந்திய தேர்தல் ஆணையம் இறக்கி விடப்பட்டுள்ளது. இதற்காகவே, பாஜக ஒன்றிய அரசு அதிகாரத்தை பயன்படுத்தி தேர்தல் தலைமை ஆணையர், ஆணையர்கள் தேர்வுக் குழுவில், செயற்கையான பெரும்பான்மை உருவாக்கிக் கொண்டுள்ளது.

எல்லைப் பகுதி மாநிலங்களிலும், பிஹாரிலும் தொடங்கிய நடவடிக்கையை நாடு முழுவதும் விரிவுபடுத்தும் அறிவிப்பு அதிர்ச்சியளிக்கிறது. இது மக்கள் நாடாளுமன்ற ஆட்சி முறையின் மீது வைத்துள்ள நம்பிக்கையை தகர்த்து, எதிர்மறை விளைவை உருவாக்கி, ஜனநாயக முறைக்கு பேராபத்தாக அமையும் என்பதை ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, தமிழ்நாட்டில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை அவசியமில்லை, வழக்கமான சுருக்கமுறை திருத்தம் போதுமானது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலர், அரசியல் கட்சி பிரதிநிதிகள் கூட்டத்தை கூட்டி, கருத்துக்களை கேட்டறிந்து, இந்திய தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

# 'தாய்மண்ணை ஈடு இணையற்ற மனவுறுதியுடன் காத்தவர்கள்' கார்கில் வெற்றி தினத்தில் முதல்வர் அஞ்சலி!




புதுடெல்லி: ஜூலை.27-

கார்கில் வெற்றி தினத்தின் 26வது ஆண்டு நினைவு நாளில், போரில் உயிர்தியாகம் செய்த வீரர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 1999ல் பாகிஸ்தானுடன் நடந்த கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்றது. இதன் வெற்றி தினம் ஆண்டுதோறும் ஜூலை 26ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. கார்கில் போரில் உயிர்த் தியாகம் செய்த ராணுவ வீரர்களை நினைவு கூரும் வகையிலும், உயிரோடு இருக்கும் கார்கில் போர் வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் இன்று 26வது ஆண்டாக கார்கில் வெற்றி தினம் 'கார்கில் விஜய் திவாஸ்' என்ற பெயரில் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

கார்கில் வெற்றி நாளையொட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "கார்கில் வெற்றி நாளில், நமது தாய்மண்ணை ஈடு இணையற்ற மனவுறுதியுடன் காத்து, உயிர்நீத்த துணிச்சல்மிகு ராணுவ வீரர்களுக்கு என் வீரவணக்கங்கள். அவர்களது தீரமும், தியாகமும் என்றும் நம் நினைவை விட்டு நீங்காது' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கார்கில் வெற்றி தினத்துக்காக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கார்கில் வெற்றி தினத்தில் நாட்டு மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். இந்த நாள், நாட்டின் பெருமையைப் பாதுகாக்க தங்கள் உயிரை அர்ப்பணித்த இந்தியத் தாயின் துணிச்சலான மகன்களின் இணையற்ற துணிச்சலையும், வீரத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது. தாய்நாட்டுக்காக அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்ற அவர்களின் விருப்பம் ஒவ்வொரு தலைமுறையினருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். ஜெய் ஹிந்த்!" எனத் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் வருவதால் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்: திமுக அரசு மீது பழனிசாமி குற்றச்சாட்டு



புதுக்கோட்டை: ஜூலை.27-

திமுக அரசு 4 ஆண்டுகளாக மக்களைப் பற்றி சிந்திக்காமல், தேர்தல் வருவதால் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை கொண்டு வந்துள்ளது என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு வரும் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, புதுக்கோட்டை அண்ணா சிலை பகுதியில் நேற்று பொதுமக்களிடையே பேசியதாவது: அதிமுக ஆட்சியின்போது கரோனா பரவல், வறட்சி, கஜா புயல் பாதிப்பு இருந்தபோதும் விலைவாசி கட்டுக்குள் இருந்தது.

ஆனால், திமுக ஆட்சியில் விலைவாசி பன்மடங்கு உயர்ந்து விட்டது. மின் கட்டணம் 67 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்துக்கு வரவேண்டிய தொழிற்சாலைகள் அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. மயிலாடுதுறையில் நேர்மையாகப் பணிபுரிந்த டிஎஸ்பி சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

திருச்சியில் டிஎஸ்பி மன உளைச்சலால் ராஜினாமா செய்யப்போவதாக கூறியுள்ளார். காவல் துறையில் பணிபுரிவோருக்கே பாதுகாப்பு இல்லை எனும்போது, பொதுமக்களின் நிலை என்ன? கடந்த 4 ஆண்டுகளாக மக்களைப் பற்றி சிந்திக்காமல், தேர்தல் வரப் போகிறது என்பதற்காக 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தைக் கொண்டுவந்துள்ளனர். இவ்வாறு பழனிசாமி பேசினார்.

தொடர்ந்து, திருமயம், விராலிமலையில் பிரச்சாரம் மேற்கொண்டார். முன்னதாக, புதுக்கோட்டையில் விவசாயிகள், வணிகர்கள், நகைக்கடை உரிமையாளர்கள், மீனவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

உருட்டுகளும், திருட்டுகளும்.. புதுக்கோட்டையில் 'உருட்டுகளும், திருட்டுகளும்' என்ற பெயரில் புதிய பிரச்சாரப் பயணத்தை பழனிசாமி நேற்று தொடங்கிவைத்தார். அவர் பேசும்போது, நீட் தேர்வு, கல்விக் கடன் ரத்து, பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, பழைய ஓய்வூதியத் திட்டம், ரூ.100 காஸ் மானியம், மாதந்தோறும் மின் கட்டணம் செலுத்தும் திட்டம், படிப்படியாக மது விலக்கு உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை.

திமுக நிறைவேற்றாத வாக்குறுதிகளை சக்கரமாக வைத்து சுழற்றச் செய்தும், ஸ்கிராட்ச் கார்டு வடிவிலும் புதிய பிரச்சாரத்தை மேற்கொள்ளவிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். முன்னாள் அமைச்சர் சி. விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பிரதமர் மோடி செல்லும் இடங்களில் காங். கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்: செல்வப்பெருந்தகை தகவல்





சென்னை: ஜூலை.26-

தமிழகத்தில் பிரதமர் மோடி செல்லும் இடங்களில் எல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக சென்னை சத்தியமூர்த்தி பவனில் அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தமிழகம் வருகிறார். அவர் தமிழக மக்களுக்கும் தமிழகத்துக்கும் செய்த துரோகங்களை கண்டித்து, அவர் தமிழகத்தில் செல்லும் இடங்களில் எல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தின் நலனை தொடர்ந்து புறக்கணித்து வருகிறார். அடுத்த தலைமுறையை உருவாக்கும் பள்ளி கல்வித்துறைக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்க மறுக்கிறார். தமிழ் மொழி நீண்ட நெடிய பாரம்பரியம், வரலாற்றை கொண்டுள்ளது. உலகின் மூத்த மொழியாக திகழ்கிறது. பிரதமர் மோடி வெளிநாடுகளுக்கு செல்லும் போதெல்லாம் தமிழ் மற்றும் திருக்குறளின் சிறப்புகளை எடுத்துரைத்து புகழ்ந்து பேசி வருகிறார். ஆனால், கீழடி அகழ்வாராய்ச்சி குறித்த உண்மையான அறிக்கையை மாற்றி எழுதி தரும்படி அமர்நாத் ராமகிருஷ்ணனுக்கு நெருக்கடி கொடுத்துள்ளார். தமிழகத்தின் உண்மையான வரலாற்றை வெளியிட மறுக்கிறார்.

தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்த பிறகு 3. தேர்தல்களை சந்தித்துள்ளார். இதுவரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கவில்லை. மற்ற மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு மத்திய அரசே நிதி ஒதுக்குகிறது. ஆனால், தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க ஜப்பானிடம் கடன் வாங்குகிறது. இவற்றையெல்லாம் கண்டித்து கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இந்திரா காந்தி ஒரு நாள் பிரதமராக இருந்தாலும், நாட்டு மக்கள் நலனுக்காக, நாட்டுக்காக உயிர் தியாகம் செய்துள்ளார். இந்திரா காந்தி இரும்பு பெண்மணி என உலக நாடுகள் போற்றி பேசியது. அதிக நாட்கள் தொடர்ந்து பிரதமராக இருந்து மோடி அப்படி என்ன தியாகம் செய்துவிட்டார்?" என்றார் செல்வப்பெருந்தகை.

## தேவநாதன் யாதவ் சொத்து பட்டியலில் இருந்த 2 ஆயிரம் கிலோ தங்கம் மாயமான குற்றச்சாட்டு: போலீஸார் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை: ஜூலை.27-

மயிலாப்பூரில் செயல்பட்டு வந்த மயிலாப்பூர் இந்து பெர்மனென்ட் ஃபண்ட் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த நூற்றுக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களிடம் பல கோடி ரூபாயை மோசடி செய்ததாக அந்நிதி நிறுவனத்தின் இயக்குநரான தேவநாதன் யாதவ் உள்ளிட்ட 6 பேரை சென்னை பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கில் தங்களுக்கு ஜாமீன் கோரி தேவநாதன் யாதவ் உள்பட 3 பேர் மூன்றாவது முறையாக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில், "தேவநாதன் யாதவுக்கு சொந்தமாக சுமார் 2 ஆயிரம் கிலோ தங்கம் உள்ளதாக குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது உயர் நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அவரது சொத்துப்பட்டியலில் அந்த தங்கம் திடீரென மாயமாகியுள்ளது.

அந்த 2 ஆயிரம் கிலோ தங்கம் இருந்தாலே பாதிக்கப்பட்ட எங்களது பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்துவிட முடியும்" என குற்றம் சாட்டப்பட்டது. அப்போது போலீஸார் தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர். முனியப்பராஜ், "நீதிமன்ற உத்தரவுப்படி தேவநாதன் யாதவ் தாக்கல் செய்துள்ள ரூ. 300 கோடி மதிப்பிலான சொத்து ஆவணங்களை ஆய்வு செய்ததில், அதில் பாதிக்கும் மேற்பட்ட சொத்துகள் வில்லங்க சொத்துகளாக உள்ளது தெரியவந்துள்ளது.

மேலும், அவர் பங்குச்சந்தையில் முதலீடு செய்துள்ள பங்குகளின் மதிப்பும் குறைந்து வருகிறது'' என்றார். அதையடுத்து நீதிபதி, இந்த நிதி நிறுவனத்தில் முதலீடு செய்து பாதிக்கப்பட்டுள்ள முதலீட்டுதாரர்கள் அனைவரது நலனும் பாதுகாக்கப்படும், என உறுதியளித்ததுடன், ஜாமீன் மனுவுக்கு போலீஸார் தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை வரும் ஆக.1க்கு தள்ளி வைத்துள்ளார். அன்றைய தினமே இந்த வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றார்.

# உடல் உறுப்புகள் திருட்டை முறைகேடு என்பதா? அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு அண்ணாமலை கண்டனம்



சென்னை, ஜூலை.27-

நாமக்கல்லில் நடந்தது கிட்னி திருட்டு அல்ல, முறைகேடு என அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதற்கு தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் அவர் கூறியிருப்பதாவது: நாமக்கல் விசைத்தறி தொழிலாளர்களுக்கு நடந்தது 'கிட்னி திருட்டு இல்லை, முறைகேடு' என தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சொல்கிறார்.

ஒருவரின் ஏழ்மையைப் பயன்படுத்தி அவரின் உடல் உறுப்புகளை திருடுவதை முறைகேடு என்று சொல்வதா? இந்த விவகாரத்தில் இடைத்தரகராக செயல்பட்ட திமுக நிர்வாகி திராவிட ஆனந்தன் இன்றுவரை கைது செய்யப்படாமல் இருப்பது ஏன், கிட்னி திருட்டில் தொடர்புடைய திமுகவின் மண்ணச்சநல்லூர் சட்டப்பேரவை உறுப்பினர் நடத்தும் மருத்துவமனை மீது ஏதோ கண்துடைப்பு நடவடிக்கை எடுத்துவிட்டால் போதுமா? இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

பழங்குடியினர் வீடுகள்: அண்ணாமலை வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், ''திருப்பூர் மாவட்டம், அமராவதி வனச்சரகத்துக்கு உட்பட்ட கோடந்தூர் திருமூர்த்திமலை கிராமத்தில் காமராஜர், எம்ஜிஆர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் இன்று வாழவே முடியாத நிலைக்கு சிதிலமடைந்திருப்பதாக அப்பகுதியை சேர்ந்த பழங்குடியின மக்கள் கூறுகின்றனர்.

வருவாய்த்துறை சார்பில் ஆய்வு செய்யப்பட்டு 110 வீடுகளைப் புதுப்பித்துத் தர பழங்குடியினர் நல ஆணையம், ஆதி திராவிடர் நலத் துறைக்குப் பரிந்துரைத்ததாகச் சொல்லப்படும் நிலையில் ஒன்றரை ஆண்டுகளாகியும் இதுவரை எந்த நடவடிக்கையோ, நிதியோ ஒதுக்கப்படவில்லை. இது, மலைவாழ் மக்களைப் பற்றிய எந்த அக்கறையும் திமுக அரசுக்கு இல்லை என்பதையே காட்டுகிறது.

எளிய மக்களுக்கான பிரதமரின் வீடுகட்டும் திட்டம், ஜல் ஜீவன், பிரதமரின் கிராமப்புற சாலைகள் திட்டம் எனப் பல திட்டங்கள் மூலம் பெறப்படும் நிதிகள் எங்குதான் செல்கின்றன?' இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



# அன்புமணி நடைபயணத்துக்கு காவல் துறை தடையா? சலசலப்பும் பின்னணியும்

சென்னை, ஜூலை.27-

சமூக நீதி, வன்முறையில்லா வாழ்வு, வேலை, விவசாயம் மற்றும் உணவு, வளர்ச்சி, கல்வி உள்ளிட்ட 10 வகையான அடிப்படை உரிமைகளை மீட்டெடுத்து தமிழக மக்களுக்கு வழங்க வேண்டும், தமிழக மக்களுக்கு நல்லாட்சி கிடைக்க வகை செய்ய வேண்டும் என வலியுறுத்தி ராமதாஸின் பிறந்த நாளான நேற்று (ஜூலை 25) தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தைத் தொடங்கப்போவதாக அன்புமணி அறிவித்தார்.

'உரிமை மீட்க... தலைமுறை காக்க' என்ற இலச்சினையையும், ' உரிமைப் பயணம் ' என்ற தலைப்பில் பிரச்சார பாடலையும் அன்புமணி வெளியிட்டார். இதனையடுத்து இந்த நடைபயணத்தால் வடதமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெடும் என்றும், தனது அனுமதியின்றி பாமக பெயர், கொடியை பயன்படுத்துவதற்கும் தடை விதிக்க கோரி டிஜிபி அலுவலகத்தில் ராமதாஸ் மனு அளித்தார்.

எனினும், திட்டமிட்டபடி நேற்று திருப்போரூரில் நடைபயணத்தை தொடங்கினார் அன்புமணி. முருகன் கோயிலில் வழிபாடு நடத்திவிட்டு, அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார்.

இந்த நிலையில், ராமதாஸ் அளித்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த விவரங்களை மேற்கோள் காட்டிய தமிழக டிஜிபி சங்கர் ஜிவால், தமிழகத்தில் உள்ள காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் இந்த நடைபயணத்துக்கு அனுமதி வழங்குவது குறித்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து பேசிய பாமக வழக்கறிஞர் பாலு, "அன்புமணியின் தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்துக்கு தடை இல்லை. அவரது நடைபயணம் திட்டமிட்டபடி தொடரும். மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை ஊடகங்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக தமிழக டிஜிபி அலுவலகம் விளக்கம் அளித்துள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பொதுக்கூட்டத்தில் பேசிய அன்புமணி ராமதாஸ், "ராமதாஸின் வழியில் அவரது கனவுகளை நிறைவேற்றவே நடைபயணம் மேற்கொள்கிறேன். மக்களுக்கு உரிமை தராத திமுக அரசை இந்த நடைபயணம் வீட்டுக்கு அனுப்பும். 10 உரிமைகளை முன்வைத்து நடைபயணம் மேற்கொள்கிறேன்.

ஒரு நாளைக்கு 2 மணி நேரம் கால்ஷீட் கொடுத்து, ஆக்ஷன் என்றதும் முதல்வர் நடிக்கிறார். பெண்களுக்கு ரூ.1,000 கொடுத்தால் உரிமை கிடைக்குமா. அது டாஸ்மாக்குக்குச் செல்கிறது. வேளாண் துறையில் வளர்ச்சி மைனஸ் 0.12 சதவீதமாக இருப்பது வெட்கக்கேடானது. சுயமரியாதையுடன் வாழ்வதற்கான சமூக நீதியை உருவாக்குவோம்'' என்றார்.

# ஹைட்ரஜன் ரயில் சோதனை வெற்றி: சென்னை ஐசிஎப் சாதனை

பசுமை ரயிலை இயக்குவதற்கான கண்டுபிடிப்பில் இந்திய ரயில்வே ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது. ஹைட்ரஜன் மூலம் இயங்கும் ரயில் இன்ஜினை வெற்றிகரமாக பரிசோதித்து சென்னை ஐசிஎப் தொழிற்சாலை சாதனை படைத்துள்ளது.

மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை ஐசிஎப்ல் ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

இந்தியா 1,200 எச்பி திறன் கொண்ட ஹைட்ரஜன் ரயில் இன்ஜின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி வருகிறது. இதன் மூலம் வருங்காலத்தில் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வரும் முன்னணி நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெறும்.

ஜீரோ கார்பன் உமிழ்வு நிலையை அடைய பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், நாட்டின் போக்குவரத்தில் முதன்மையாக உள்ள ரயில்வேயில் ஹைட்ரஜன் இன்ஜினை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் அந்த இலக்கை நாம் விரைவாக அடைய முடியும்'' என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2023ம் ஆண்டு மாநிலங்களவையில் பேசிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ''பாரம்பரிய நகரங்களுக்கு ஹைட்ரஜன்'' என்ற திட்டத்தின் கீழ் 35 ஹைட்ரஜன் ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், ஒவ்வொரு ரயிலும் ரூ.80 கோடி செலவிலும், ஒவ்வொரு பாதையின் கட்டமைப்பை உருவாக்க ரூ.70 கோடி செலவிடப்படும் என்றும் அவர் கூறியிருந்தார்.

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அனுமதிபெற்று கன்னியாகுமரி மாவட்டத்தில் விரைவில் புதிய தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்








கன்னியாகுமரி, ஜூலை.27-

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடக்குதாமரைகுளம் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அனாதைமடம் திடல் பகுதிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாவட்டத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள் மற்றும் வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கும் வகையிலும், மாவட்டம் முழு வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிக்கும் தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்ட பணிகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை ஒரு பெரிய தொழில் நிறுவனங்கள் மூலம் மக்கள் அதிக வேலை வாய்ப்பு வரும் சூழல் இல்லாமல் இருந்தது. அதனை சரி செய்ய வேண்டும் என்பதற்காகவும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2025-2026ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தொழில்துறை சார்பில், கன்னியாகுமரி மாவட்டத்தில் சிப்காட் தொழில்போட்டை மற்றும் மினி தொழில் பூங்கா அமைக்கப்படுமென அறிவித்தார்கள்.

அதன்ஒருபகுதியாக இன்று அகஸ்தீஸ்வரம் வட்டம், வடக்கு தாமரைக்குளம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 32 ஏக்கர் பரப்பளவில் புதிதாக அமைக்கப்பட உள்ள சிப்காட் தொழில்பேட்டைக்கான இடத்தினை புத்தளம் பேரூராட்சி மணவாளபுரம் பகுதியிலுள்ள படகுதளத்திலிருந்து 6 கி.மீ தொலைவில் அமைந்திருக்கும் இடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, தொழில்பேட்டை அமைவதற்கான சாத்திய கூறுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. தொடர்ந்து தென்தாமரைக்குளம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மூலதனமானிய நிதியின் கீழ் ரூ.0.97 கோடி மதிப்பில் வளமீட்பு பூங்கா செல்லும் சாலையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி, கலைஞர் நகர்புற மேம்பாடுத்திட்டத்தின்கீழ் ரூ.1.76 கோடி மதிப்பில் மணக்குடி ஏரியிலிருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் நடைபெறும் இடம் வரையில் சிறுபாலம் அமைக்கும் பணி, சிறப்பு நிதியின்கீழ் ரூ.0.70 கோடி மதிப்பில் 12 வார்டு பகுதியில் திடக்ழிவு மேலாண்மை சாலையில் கருந்தளம் அமைத்தல் என மொத்தம் ரூ.3.43 கோடி மதிப்பில் சாலை மற்றும் மேம்பாலம் அமைக்கப்படவுள்ள இடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அனாதை மடம் திடலில் சுற்று சூழல் பாதிக்காத வகையில் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடம் ஆய்வு செய்யப்பட்டது. சுற்றுலா சார்ந்த தொழில் வளர்ச்சிக்கும் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும். இதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உருவாகும். இவ்வாறு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் திரு.என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.பாலசுப்பிரமணியம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, உதவி இயக்குநர்கள் திரு.ராமலிங்கம் (பேரூராட்சிகள்), திரு.கணேசன் (நிலஅளவை), திருமதி.தீபா (மீன்வளத்துறை), செயற்பொறியாளர்கள் திருமதி. பாரதி (மாசு கட்டுப்பாட்டுத்துறை), திரு.அழகியநம்பி (தொழில் பூங்கா (திருநெல்வேலி), சிப்காட் திட்ட அலுவலர் திரு.மாரிமுத்து மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.காமராஜ் உதவி சுற்றுலா அலுவலர் திரு.சதீஷ்குமார், நாகர்கோவில் மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.ஆல்பர் மதியரசு, நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாக பொறியாளர் திரு.ரெகுராமன் உதவி செயற்பொறியாளர்கள் திரு.பாலமுருகன் (தொழில் பூங்கா), திருமதி.தேவி (மாநகராட்சி), அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.முருகன், கன்னியாகுமரி நகர் மன்ற தலைவர் திரு.குமரி.எஸ்.ஸ்டீபன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. ஹெலன் டேவிட்சன், திரு,பாபு, திரு.சரவணன், வழக்கறிஞர் திரு.சிவராஜ், திரு.டேவிட்சன், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சத்யா வீட்டுக்கு லஞ்ச ஒழிப்புத் துறையை அனுப்பியது யார்? சம்பத் மீது சந்தேகக் கொக்கி போடும் ஆதரவாளர்க



பண்ருட்டி, ஜூலை.27-

வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக கடந்த ஒரு வருடத்தில் இரண்டாவது முறையாக லஞ்ச ஒழிப்புத் துறையின் சோதனைக்கு உள்ளாகி இருக்கிறார் பண்ருட்டி தொகுதி அதிமுக முன்னாள் எம்எல்ஏவான சத்யா பன்னீர்செல்வம். ஆளும் கட்சி மட்டுமல்லாது சொந்தக் கட்சியினரும் சத்யாவின் வளர்ச்சியை ரசிக்கவில்லை. அதனால் தான் அவரை சுற்றிச் சுற்றி அடிக்கிறார்கள் என்கிறார்கள் சத்யாவின் ஆதரவாளர்கள்.

சத்யா பன்னீர்செல்வம் 2016ல் பண்ருட்டி எம்எல்ஏவாக தேர்வான நாளில் இருந்தே அவருக்கும் கடலூர் வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரான முன்னாள் அமைச்சர் எம்.சி.சம்பத்துக்கும் அவ்வளவாய் ஒத்துப்போகவில்லை. மணல் பிரச்சினையில் இவர்களுக்குள் ஏற்பட்ட மனக்கசப்பு மல்லுக்கட்டாக மாறியதால் 2021 ஏப்ரலில் சத்யா பன்னீர்செல்வத்தைக் கட்சியிலிருந்தே நீக்கினார் இபிஎஸ். அப்போதே, "எம்.சி.சம்பத், (சிதம்பரம்) எம்எல்ஏவான பாண்டியன், சொரத்தூர் ராஜேந்திரன் ஆகியோரை நான் வணங்கும் சிவனும் ஜெயலலிதாவின் ஆன்மாவும் ஒரு போதும் மன்னிக்காது'' என சாபம் விட்டார் சத்யா பன்னீர்செல்வம்.

இந்த நிலையில், 2021ல் பண்ருட்டி தொகுதியை திமுக கூட்டணி கைப்பற்றியது. இதையடுத்து, கடந்த ஆண்டு சத்யா பன்னீர்செல்வத்தை மீண்டும் கட்சியில் சேர்த்து மாநில மகளிரணி துணைச் செயலாளராக்கினார் இபிஎஸ். இதையடுத்து, மீண்டும் கட்சிக்குள் தனது செல்வாக்கை புதுப்பித்துக் கொண்ட சத்யா பன்னீர்செல்வம், ஜூலை 13ம் தேதி பண்ருட்டி வந்த இபிஎஸ்ஸுக்கு கூட்டத்தைத் திரட்டி பிரம்மாண்ட வரவேற்புக் கொடுத்து அசத்தினார்.

இதைப் பார்த்துவிட்டு உற்சாகமான இபிஎஸ், "கடந்த 5 நாட்களாக 11 தொகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறேன். ஆனால், எங்குமே இவ்வளவு கூட்டம் கூடவில்லை. இந்த எழுச்சி அதிமுக வெற்றிக்கான அறிகுறி'' என்று சத்யா பன்னீர்செல்வத்தையும் தன்னருகே வைத்துக் கொண்டு சொன்னார். அப்போது கூடவே நின்ற எம்.சி.சம்பத் இதற்கு எந்தவிதமான ரியாக்ஷனும் காட்டவில்லை.

இந்த நிலையில், ஜூலை 18ம் தேதி அதிகாலையில் சத்யா பன்னீர்செல்வம் வீட்டுக் கதவை தட்டியது லஞ்ச ஒழிப்புத் துறை. வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக பதிவான வழக்கில் சோதனை என்று சொன்னதும் பதற்றமான சத்யா பன்னீர்செல்வம் மயக்கமானார். 10 ஆண்டு காலம் அமைச்சராக இருந்த எம்.சி.சம்பத்தை நெருங்காத லஞ்ச ஒழிப்புத் துறையினர் ஒரே ஒருமுறை மட்டுமே எம்எல்ஏவாக இருந்த சத்யா பன்னீர்செல்வத்தை விடாமல் துரத்துவதன் பின்னணி என்ன என சத்யாவின் ஆதரவாளர்கள் இப்போது சந்தேகக் கொக்கி போடுகிறார்கள்.

மாவட்டத் தலைநகரான கடலூரைக் காட்டிலும், பண்ருட்டியில் இபிஎஸ்ஸை அசரவைக்கும் அளவுக்கு சத்யா பன்னீர்செல்வம் கூட்டத்தைக் கூட்டியதில் சம்பத் தரப்பு ரொம்பவே அப்செட் ஆனதாகச் சொல்லும் சத்யாவின் ஆதரவாளர்கள், "பண்ருட்டி தொகுதியைச் சேர்ந்தவர் தான் என்றாலும் சம்பத்தால் இங்கு சத்யாவை மீறி அரசியல் செய்ய முடியவில்லை. தன்னை மீறி மாவட்டத்தில் யாரும் வளர்ந்துவிடக் கூடாது என்பதால் தான் 2021ல் தேர்தலில் போட்டியிட முடியாத படிக்கு சத்யாவை ஓரங்கட்டினார் சம்பத். அதே போல் இப்போதும் சத்யாவின் பேரைக் கெடுக்க சம்பத் தரப்பு தான் ஏதாவது சதிவலை பின்னி இருக்குமோ என்று சந்தேகப்படுகிறோம்'' என்றனர்.

இதுகுறித்து சத்யா பன்னீர்செல்வத்திடம் கேட்டதற்கு, "அதிகாலை 6 மணிக்கெல்லாம் எங்கள் வீட்டுக்கு வந்த லஞ்ச ஒழிப்புத் துறையினர், குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் சோதனையில் ஈடுபட்டனர். அது என்னை ரொம்பவே பாதித்ததால் தான் மயக்கமாகி விட்டேன். கடந்த ஆண்டு நெய்வேலியில் அம்மா சிலை திறப்பு விழாவுக்கு அண்ணன் எடப்பாடியார் வந்த போது பிரம்மாண்ட வரவேற்பு கொடுத்து உற்சாகப்படுத்தினோம். அப்போது அவரும் எங்களைப் பாராட்டினார். அதற்கடுத்த இரண்டே நாளில் இப்படித்தான் எங்கள் வீட்டுக் கதவை லஞ்ச ஒழிப்புத் துறையினர் வந்து தட்டினார்கள்.

இப்போது தமிழகத்தை மீட்கும் பயணத்தில் பண்ருட்டிக்கு வந்த அண்ணன் எடப்பாடியாருக்கு அதே போல் வரவேற்பு அளித்தோம். நாங்கள் யாரையும் பணம் கொடுத்து அழைத்து வரவில்லை. அது இயல்பாகக் கூடிய கூட்டம். இது ஆளும் கட்சியினரின் கண்ணை உறுத்தியதால் எங்கள் வீட்டுக்கு மீண்டும் லஞ்ச ஒழிப்புத் துறையை அனுப்பி இருக்கிறார்கள். இதற்கு பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அதை மக்களும் எங்கள் கட்சியினரும் அறிவார்கள். இதற்கு மேல் நான் கூறுவதற்கு ஏதுமில்லை'' என்றார்.

எம்.சி.சம்பத்திடம் இதுகுறித்து கேட்டதற்கு, "ரெய்டுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ரெய்டு குறித்தான தகவல்களையும் அதற்கான காரணத்தையும் பொதுச்செயலாளருக்கு தெளிவுபடுத்தி இருக்கிறோம்'' என்றார்.



# ரயில் முன் பாய்ந்த மஞ்சு வாரியர் காப்பாற்றிய மனோஜ் கே.ஜெயன்: பகீர் சம்பவம்

சுந்தர் தாஸ் இயக்கத்தில் 1996ல் வெளிவந்த சல்லாபம் என்கிற திரைப்படத்தின் மூலம்தான் மஞ்சு வாரியர் அறிமுகமானார். தனது முதல் படம் என்கிற எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் மிகவும் யதார்த்தமாக நடித்திருந்தார். இந்த நிலையில், அப்படத்தில் மஞ்சு வாரியருடன் இணைந்து நடித்த நடிகர் மனோஜ் கே. ஜெயன், அப்படத்தில் நடந்த ஷாக்கிங் சம்பவம் குறித்து இப்போது வெளிப்படையாக பேசியுள்ளார்.

''சல்லாபம் படம் துவங்கி கிட்டத்தட்ட 24 நாட்கள் ஆன நிலையில், அப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சியை ஒரு ரயில்வே ட்ராக்கில் படப்பிடிப்பு நடந்தது. தன் காதல் கை கூடாத நிலையில், ஓடும் ரயிலில் விழுந்து தன் உயிரை மஞ்சு வாரியர் கதாபாத்திரம் மாய்த்து கொள்வதாக காட்சி இருந்தது. அந்த காட்சியில் நானும் இடம் பெற்று இருந்தேன். ஆனால், மஞ்சு வாரியர் வசனம் பேசியபடி தன்னை மறந்து அந்த கதாபாத்திரமாகவே மாறி ரயில் தண்டவாளத்தை நெருங்கி விட்டார்.

ரயில் கிட்டத்தட்ட அருகில் நெருங்கி விட்டது. அந்த நேரத்தில் உடனடியாக நான் அவரது கைகளை வலுவாக பிடித்து, மேலும் போகவிடாமல் தடுத்து நிறுத்தினேன். சரியாக அந்த நேரத்தில் ரயிலும் எங்களை மிக அருகில் ஒட்டியபடி சென்றது. ரயில் சென்றதும் பின்னால் இருந்து இயக்குநர் கட் சொன்ன பிறகுதான், அவரை என் பிடியில் இருந்து விடுவித்தேன்.

அந்த காட்சி வீணாகிவிட்டது என்றுதான் நான் நினைத்தேன். ஆனால், படக்குழுவினர் காட்சி மிகவும் தத்ரூபமாக இருந்தது என பாராட்டினார்கள். அன்று மட்டும் அவரை நான் இழுத்து பிடிக்காமல் இருந்திருந்தால், அவர் ரயில் சக்கரங்களில் விழுந்து இருப்பார். ஒரு நல்ல நடிகையை இந்த திரையுலகம் இழந்திருக்கும்'' என அவர் கூறியுள்ளார்.



# சிவகார்த்திகேயனுடன் இணைந்தார் ராணா

சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா நடிக்கும் 'பராசக்தி' திரைப்படம் இந்தி திணிப்பு தொடர்பாக நடந்த உண்மையான சம்பவங்களை வைத்து தான் கதை உருவாக்கப்பட்டுள்ளதாம். தமிழ்நாட்டில் 1965ம் ஆண்டு நடந்த உண்மை சம்பவம் தான் 'பராசக்தி' படத்தின் கதை என சொல்லப்படுகிறது.

அந்த சமயத்தில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களிலும் இந்தி திணிப்பு போராட்டம் நடைபெற்றது. இதையெல்லாம் இயக்குனர் சுதா கொங்கரா 'பராசக்தி' படத்தில் காட்டியிருப்பதாக தெரிகிறது. அதற்காக தான் மலையாளத்தில் இருந்து பசில் ஜோசப், கன்னடத்தில் இருந்து தனஞ்சயா ஆகியோரை இப்படத்தில் சுதா கொங்கரா நடிக்க வைத்திருக்கிறார்.

இந்நிலையில் தெலுங்கில் இருந்து ராணாவை நடிக்க தேர்வு செய்துள்ளார். கதைப்படி கேரளா நாட்டில் நடந்த போராட்டங்களுக்கு பசில் ஜோசப் தலைமை தாங்குவதாகவும், அதுபோல ஆந்திரா போராட்டத்திற்கு ராணா தலைமை தாங்குவதாகவும் காட்சிகள் படத்தில் இடம்பெற உள்ளது.




# லிப் டு லிப் தர வந்த ஹீரோ தடுத்தார் வித்யா பாலன்

லிப் டு லிப் கிஸ் தர வந்த ஹீரோவை தடுத்து நிறுத்தினார் வித்யா பாலன். பாலிவுட்டின் முன்னணி நடிகைகளில் ஒருவர் வித்யா பாலன். தமிழில் அஜித் ஜோடியாக நேர்கொண்ட பார்வை படத்தில் நடித்திருந்தார். சமீபத்திய பேட்டி ஒன்றில் வித்யா பாலன் பேசும்போது, "ஒரு படத்தில் ஹீரோவுடன் மிக நெருக்கமான முத்தக் காட்சியில் நடிக்க வேண்டி இருந்தது. அது லிப் டு லிப் காட்சி. அந்த காட்சியை படமாக்குவதற்கு சற்று நேரம் முன்பாக தான் அந்த ஹீரோ சைனீஸ் உணவு வகைகளை கட்டு கட்டு என கட்டினார்.

சாப்பிட்டவுடன் கொஞ்ச நேரத்திலேயே அந்த காட்சியில் அவர் நடிக்க வந்தபோது அந்த உணவு வாடை அப்படியே இருந்தது. அவரிடம் நீங்கள் பிரஷ் பண்ணவில்லையா என்று கேட்டதற்கு, எதற்காக? என்று திருப்பி கேட்டார். உடனே அவரிடம் உங்களுக்கு பார்ட்னர் என யாராவது இருக்கிறாரா என்று கேட்டேன். அதன்பிறகு தான் அந்த நடிகர் புரிந்துகொண்டு சென்று பிரஷ் பண்ணி விட்டு வந்து நடித்தார்'' என்கிற ஒரு புதிய தகவலை கூறியுள்ளார் வித்யா பாலன்.

# சேரன் இயக்கத்தில் உருவாகிறது ராமதாஸின் வாழ்க்கை வரலாறு




சேரன் இயக்கத்தில் பாமக நிறுவனர் ராமதாஸின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக உருவாகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் வாழ்க்கை வரலாறு படமாகிறது. இந்தப் படத்தினை ஜி.கே.தமிழ்குமரன் தயாரிக்க சேரன் இயக்கவுள்ளார். இதன் ஒளிப்பதிவாளராக ஏகாம்பரம் பணிபுரியவுள்ளார். இந்த பயோபிக்கில் ராமதாஸாக நடிகர் ஆரி ஒப்பந்தமாகி இருக்கிறார். அவரை வைத்து எடுக்கப்பட்ட புகைப்படங்களை வைத்து போஸ்டர்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது படக்குழு.

இன்று ராமதாஸின் பிறந்த நாளாகும். இதனை முன்னிட்டு அவரது வாழ்க்கை வரலாறு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு அரசியல் தரப்பினரும், திரையுலகினரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். 'அய்யா' எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் போஸ்டர்களில் 'இன விடுதலைக்கான போராட்டத்தின் வரலாறு' என்ற வாசகமும் இடம்பெற்றுள்ளது.

பாமக கட்சியின் நிறுவனம் ராமதாஸ். அவரது மகன் அன்புமணி ராமதாஸ் தலைவராக இருக்கிறார். சமீப காலமாக அப்பா மகன் இருவருக்கும் இடையே கடும் உரசல் ஏற்பட்டு இருக்கிறது. அப்பா ஆதரவாளர்களை மகன் நீக்குவதும், மகன் ஆதரவாளர்களை அப்பா நீக்குவதும் நடைபெற்று வருகிறது. இந்தத் தருணத்தில் ராமதாஸின் வாழ்க்கை வரலாறு படமாக உருவாவது குறிப்பிடத்தக்கது.

# யுரோ கோப்பை பெண்கள் கால்பந்து முதல் முறையாக பைனலில் ஸ்பெயின்



ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான 14வது யுரோ கோப்பை பெண்கள் கால்பந்துப் போட்டி சுவிட்சர்லாந்தில் நடக்கிறது. ஜூரிச்சில் நேற்று நடந்த 2வது அரையிறுதியில் முன்னாள் சாம்பியன் ஜெர்மனி, ஸ்பெயின் அணிகள் மோதின. இதுவரை நடந்த 13 யுரோ கோப்பை தொடர்களில் ஜெர்மனி 8 முறை கோப்பையை வசப்படுத்தியது. அந்த உற்சாகத்தில் ஸ்பெயின் அணியை எதிர்கொண்டது.

இந்த போட்டியில் இரு அணிகள் வீராங்கனைகள் கோல் போட முனைப்பு காட்ட ஆட்டத்தில் அனல் பறந்தது. இருப்பினும் இரு அணிகளின் தற்காப்பு ஆட்டக்காரர்கள், கோல்கீப்பர்களின் அபார ஆட்டத்தால் முழு ஆட்டமும் கோலின்றி சமனில் முடிந்தது. இதனால் கூடுதலாக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டது. இதில் 113வது நிமிடத்தில் ஸ்பெயின் வீராங்கனை டெல் காஸ்டில்லோ, ஜெர்மனியின் தற்காப்பு அரணை கடந்து தந்த பந்தை சக வீராங்கனை ஐதானா போன்மடி கண்ணிமைக்கும் நேரத்தில் கோலாக மாற்றினார்.

அதனால் ஸ்பெயின் ரசிகர்களின் உற்சாகத்தால் அரங்கமே அதிர்ந்தது. அதன்பிறகு எஞ்சிய 7 நிமிடங்களில் கோலடிக்க இரு அணிகளும் மேற்கொண்ட முயற்சிகளுக்கும் பலன் கிடைக்கவில்லை. இதனால் ஸ்பெயின் 10 என்ற கோல் கணக்கில் வெற்றிப் பெற்று முதல் முறையாக பைனலுக்கு முன்னேறியது. ஜூலை 27ம் தேதி நடக்கும் இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்தை ஸ்பெயின் எதிர்கொள்கிறது.

# மகளிர் உலகக்கோப்பை செஸ் வரலாற்றில் முதல்முறையாக பைனலில் இந்திய வீராங்கனைகள்; பட்டத்துக்கு திவ்யா, ஹம்பி பலப்பரீட்சை



மகளிர் உலகக்கோப்பை செஸ் தொடர் பைனலில் இந்திய வீராங்கனைகள் திவ்யா, ஹம்பி ஆகியோர் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றனர். மகளிர் உலக்கோப்பை செஸ் போட்டி ஜார்ஜியாவில் உள்ள பதுமி நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஒரு அரையிறுதி போட்டியில் இந்தியாவின் 19 வயது வீராங்கனை திவ்யா தேஷ்முக், முன்னாள் உலக சாம்பியனான சீனாவின் டான் ஜோங்யியை சந்தித்தார்.

இந்த போட்டி டிராவில் முடிந்ததால் டை பிரேக்கர் போட்டியில் மோதினார். இதில் 1.5 - 0.5 என்ற கணக்கில் வென்று ஜோங்யியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் மகளிர் செஸ் உலகக்கோப்பை இறுதி போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை திவ்யா தேஷ்முக் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் 2026ம் ஆண்டு நடக்கும் கேண்டிடேட்ஸ் செஸ் தொடருக்கும் தகுதி பெற்றார்.

மற்றொரு அரையிறுதி போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி, சீனாவின் டிங்ஜி லீயுடன் மோதினார். இந்த போட்டியின் 75வது நகர்வில் டிராவில் முடிந்தது. இருவரும் தலா ஒரு புள்ளிகள் எடுத்திருந்ததால் வெற்றியை தீர்மானிக்க டை பிரேக்கர் சுற்று நேற்று நடந்தது. 8 ஆட்டங்களில் 53 என்ற கணக்கில் டிங்ஜியை வீழ்த்தி ஹம்பி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு முன்னேறினார்.

இந்த வெற்றி மூலம் 2026ம் ஆண்டு நடக்கும் கேண்டிடேட்ஸ் செஸ் தொடருக்கும் தகுதி பெற்றார். இறுதிப் போட்டி ஜூலை 26 மற்றும் 27ம் தேதிகளில் நடக்கும். தேவைப்பட்டால் ஜூலை 28ம் தேதி டைபிரேக்குகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. வரலாற்றில் முதல்முறையாக இறுதி போட்டியில் இரு இந்திய வீராங்கனைகள் மோத உள்ளதால், முதல்முறை உலகக்கோப்பை கிடைப்பது உறுதியாகி உள்ளது.

# இந்திய அணியின் உயிரற்றப் பந்து வீச்சு: தொடரை வெல்லும் முனைப்பில் இங்கிலாந்து



ஓல்ட் டிராபர்ட் டெஸ்ட் போட்டியில் நேற்று இந்திய அணியின் ரிஷப் பந்த் கால் எலும்பு முறிவுடன் களமிறங்கி ஜோப்ரா ஆர்ச்சரை சிக்ஸர் அடித்தும், அரைசதம் அடித்தும் பெரிய அளவில் இந்திய அணிக்கு அளித்த ஊக்கம் பவுலர்கள் மனதில் ஏறவில்லை. எதற்காகப் பந்து வீசுகிறோம் என்று தெரியாமலேயே வீசினர். பும்ரா உட்பட அனைவரும் சொதப்பலோ சொதப்பல். கில்லின் களவியூகம் பார்க்கச் சகிக்கவில்லை. ரன் தடுப்பு களவியூகம் அமைத்து இங்கிலாந்து தொடக்க வீரர்களை செட்டில் ஆக விட்டார்.

ஜஸ்பிரித் பும்ராவின் பந்தில் ஒன்றுமே இல்லை, ஒன்றிரண்டு பந்துகள் ரவுண்ட் த விக்கெட்டில் வீசி டக்கெட்டை பீட் செய்ததோடு சரி, மற்றபடி எந்த ஒரு உத்தியும் இல்லாத அரைகுறை கால் நகர்த்தல்களுடன் அசிங்கமாக ஆடிவரும் கிராலியையும் பும்ராவினால் வீழ்த்த முடியவில்லை. இத்தனைக்கும் இங்கிலாந்து பாஸ்பால் அதிரடியெல்லாம் ஆடவில்லை, ஆனால் அப்படி ஆடுங்கள், ஆடுங்கள் என்று இந்தியப் பந்து வீச்சு அவர்களை வலியுறுத்தியது என்பதுதான் அதிர்ச்சியளித்தது. அதனால்தான் 46 ஓவர்களில் 225 ரன்களை எடுத்துள்ளனர், இதனால் இந்த டெஸ்ட்டை இந்தியா தோற்பதோடு தொடரையும் இழக்கும் நிலைதான் ஏற்பட்டுள்ளது.

சிராஜ் புதிய பந்தில் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும், அன்ஷுல் காம்போஜிடம் கொண்டு போய் அதிரடி இங்கிலாந்து தொடக்க வீரர்களுக்கு எதிராக ஷுப்மன் கில் கொடுக்கிறார் என்றால் சிராஜ் என்ற சீனியர் பவுலர், அதுவும் தன் இருதயம் வெடிக்குமாறு கடந்த 3 டெஸ்ட் போட்டிகளில் அயராது வீசியுள்ளார், அவர் லீட் பவுலர் இல்லாமல் எங்கிருந்து வந்தார் இந்த அன்ஷுல் காம்போஜ்.

ரிக்கி பாண்டிங் அன்ஷுல் காம்போஜிடம் புதிய பந்தை கொடுத்ததை கடுமையாகச் சாடியுள்ளார், "உத்தி ரீதியாக இந்தியா ஒன்றுமில்லாமல் இருந்தனர். காம்போஜிடம் புதிய பந்தைக் கொடுத்தது ஆரம்பத்திலிருந்தே எனக்குப் பிடிக்கவில்லை. டக்கெட் அடித்த முதல் 6 பவுண்டரிகளில் 5 பவுண்டரிகள் லெக் திசையில் வந்ததுதான், ஆஃப் திசையில் பீல்டை வைத்து பந்து வீசச்சொன்னால் லெக்திசையில் வீசி 3 பவுண்டரிகளைத் தாரை வார்த்தார் அன்ஷுல்.'' என்று கடுமையாகத் தாக்கியுள்ளார் பாண்டிங்..

அவர் மேலும் கில் கேப்டன்சியை விமர்சிக்கும் போது, பும்ராவை ஆண்டர்சன் முனையில் இருந்து வீசச்சொன்னது பெரிய தவறு. ஏனெனில் எதிர்முனையான ஸ்டாதம் முனையிலிருந்துதான் அதிக விக்கெட்டுகள் நேற்று விழுந்திருக்கின்றன, ஸ்டோக்ஸ் அங்கிருந்துதான் வீசினார், அதே முனையிலிருந்துதானே பும்ரா வீச வேண்டும், என்ன ஐடியாவில் கில் அவரை ஆண்டர்சன் முனையிலிருந்து வீசச்சொன்னார் என்பது புரியவில்லை, முற்றிலும் தவறான கேப்டன்சி என்று சாடினார்.

முதல் ஸ்பெல் படுமோசமாக அமைந்தது. இந்தியா 358 ரன்களை மட்டுமே எடுக்க 166 ரன்களை டக்கெட்டும், கிராலியுமே எடுக்க அனுமதிக்கப்பட்டனர். எல்லாவற்றையும் விட படுமோசம் ஷர்துல் தாக்கூர், அவர் பேட்டிங்கில் தன்னை அணியில் தக்கவைக்க முடியாது, அவர் பந்து வீசி விக்கெட்டுகளை வீழ்த்தினால்தான் முடியும். கடந்த போட்டியில் நிதிஷ் ரெட்டி வீச விக்கெட் கீப்பரை முன்னால் வரச் செய்து வீசியது பலனளித்தது, இந்த முறை அந்த முயற்சி எதையும் கில் செய்யவே இல்லை. என்ன ஆயிற்று அவருக்கு என்று புரியவில்லை. தாக்கூர் சுத்த வேஸ்ட். பவுலிங் வேஸ்ட் அவர்.

ஆர்ச்சர், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் பந்து வீசும் போது ஸ்டம்புகளுக்கு அருகே வந்து வீசி பந்தை உள்ளேயும் வெளியேயும் அட்டகாசமாக ஸ்விங் செய்து படுத்தினர், ஆர்ச்சர் அந்த லெந்திலிருந்து பந்தை எகிறவும் செய்யும் போது பந்து உடலுக்கு நேராக வருகிறது, மிகக் கடினம். ஆனால் இந்தியப் பந்து வீச்சு களவியூகத்திற்கு தக்கவாறு இல்லாமல் ஆஃப் திசையில் நிறுத்தினால் லெக் ஸ்டம்பிலும் லெக் திசையில் வலுப்படுத்தினால் ஆஃப் ஸ்டம்பில் ஷார்ட் பிட்சுமாக வீசி பவுண்டரிகளை வாரி வழங்கினர். இதனால் என்ன ஆயிற்று இந்த டெஸ்ட்டை இழந்து தொடரை வெல்லும் வாய்ப்பை இங்கிலாந்துக்கு இந்திய பவுலிங் வழங்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

இன்று இந்த எண்ணத்தை மாற்றுமாறு வீசி அடுத்த 100125 ரன்களுக்குள் மீதமுள்ள 8 விக்கெட்டுகளை வீழ்த்தினால்தான் இந்தப் போட்டியில் இந்திய அணி தப்ப முடியும்.







# குரோம்பேட்டை நவசக்தி சுயம்பு துர்க்கை அம்மன் திருக்கோவில் 2ஆம் வார ஆடி திருவிழா

குரோம்பேட்டை ஜூலை.27

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை அடுத்த லட்சுமிபுரம் பகுதியில் அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்க்கை அம்மன் திருக்கோவில் இரண்டாம் ஆரம் ஆடி திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது

அருள்மிகு நவசக்தி சுயம்பு துர்க்கை அம்மன் திருக்கோவில் 25 தேதி வெள்ளிக்கிழமை முதல் 27 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை நடை திறப்பு அம்மனுக்கு சிறப்பு திருமுழுக்கு தீபாரதனை தீர்த்தவாரி காப்பு கட்டுதல் கூழ் வார்த்தல் நடைதிறப்பு அம்மன் திருவீதி உலா புறப்படுதல் பல்வேறு நிகழ்ச்சிகளை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் இணைந்து ஏற்பாடுகளை செய்துள்ளனர் அதனைத் தொடர்ந்து உறவா நட்பா என பட்டிமன்றம் நகைச்சுவை புலவர் ராமலிங்கம் அவர்கள் தலைமையில் உறவா அணி சார்பில் நீலவேணி முத்து, பேராசிரியர் முனைவர் துரைப்பாண்டி, கோவை சத்தியா மற்றும் நட்பை அணி மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், திருச்சி அன்னலட்சுமி, பிரபாகரன் ஆகியோர் உரையாடினார்கள் அப்பொழுது இறுதியில் நட்பே அணி 59 மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றனர் இந்த விழாவில் கலந்து கொண்ட மூன்று நாட்களுக்கும் சிறப்பாக அன்னதானம் நடைபெற்று வருகிறது மற்றும் பொதுமக்கள் குரோம்பேட்டை லட்சுமிபுரம் பகுதியில் சார்ந்து பொதுமக்கள் கோயில் நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# "சமூக நல்லிணக்க ஊராட்சி விருது" பெறுவதற்கு, விண்ணப்பங்கள் வரவேற்பு

## மாவட்ட ஆட்சித்தலைவர் பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.27-

சாதி பாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையினையும் கடைபிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து கவுரவிக்கும் வகையில், தகுதி வாய்ந்த 10 ஊராட்சிகளுக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருதுடன் தலா ரூ.1 கோடி வழங்கப்படும் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், 2025ம் ஆண்டிற்கான சமூக நல்லிணக்க ஊராட்சி விருது பெற விரும்புவோர், விண்ணப்பப்படிவத்தை http://tinyurl.com/panchayat award (அல்லது)http://cms.tn.gov.in/cms_migrated/document/forms/samooga_Nallinakka_Ooratchi_Award_Application. pdf என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினர் நல அலுவலகத்தில் நேரிலோ பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து வருகின்ற ஜூலை 31 ஆம் தேதிக்குள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினர் நல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகள் 50 சதவீதம் மானியத்தில் புல் நறுக்கும் கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், ஜூலை.27-



தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 2025-2026 ஆம் ஆண்டிற்கு கால்நடைகளுக்கு அளிக்கப்படும் தீவன மேலாண்மையில் தீவன விரயத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும் கால்நடைகளின் செரிமான தன்மையை அதிகரிக்கவும், உற்பத்தி திறனை பெருக்கவும், சிறு, குறு விவசாயிகளுக்கு மின்சாரம் மூலம் இயங்கும் 86 புல் நறுக்கும் கருவிகள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படவுள்ளது. இந்த மின்சாரத்தில் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள், குறைந்தபட்சம் 2 பசுமாடுகள் மற்றும் கால் ஏக்கர் பசுந்தீவனம் பயிரிட்டு மின்சார வசதியுடன் பராமரித்து வரும் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளுக்குள், இந்த மானியத்தில் புல் நறுக்கும் கருவி பெற்றவர் இப்போது மானியம் பெற விண்ணப்பிக்க இயலாது.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் பயனாளிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கும், மகளிருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி திட்ட விளக்கங்களை பெற்று உரிய படிவத்தில் விண்ணப்பிக்கலாம், என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஆமிர் கலீமி அரபிக் கல்லூரியின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், ஈராக், பாக்தாத் ஷஃரீப் அப்துல் காதர் மன்சூர் அல் ஜெய்லானி 150 மாணவர்களுக்கு பட்டமளித்து வாழ்த்துரை வழங்கினார்

சுங்குவார்சத்திரம். ஜூலை.27

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் அடுத்த புதுப்பட்டுப் பகுதியில் எஸ் ஏ கே கல்விக் குழுமத்தின் அங்கமான ஆமிர் கலீமி அரபிக் கல்லூரி கடந்த 18 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

இக்கல்லூரில் கல்வி கற்க முடியாத ஏழை இஸ்லாமிய மாணவர்களை கண்டெடுத்து அவர்களுக்கு ஆரம்ப கல்வி தொடங்கி , கல்லூரி கல்வி மற்றும் இறை சேவைபணி கல்வி என ஏழு ஆண்டுகள் கற்பித்து உலமாக்களாக உருவாக்கப்படுகின்றனர்.




அவ்வகையில் இன்று 150 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் கல்வி குழுமத்தின் தலைவர் மன்ஜூர் அஹ்மது ஆமீர் ரஷீ திஷாஹ் ஹள்ரத் கிப்லா தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக ஈராக் நாட்டினை சேர்ந்த பக்தாத் ஷஃரீப் , முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் திருப்பேரர் அப்துல் காதிர் மன்சூர் அல் ஜெய்லானி கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.

பட்டங்களை பெற்ற மாணவர்கள் 9ஆம் வகுப்பு ஆரம்ப கல்வியுடன் தொடங்கி , கல்லூரி கல்வி, அதனுடன் இறை சேவைக்காண கல்வியை கற்று உலக நாடுகள் முழுவதும் இறை பணி சேவை மேற்கொள்வார்கள் எனவும், இவர்கள் அனைவரும் 7 ஆண்டுகள் இந்த கல்வியை இங்கே தங்கி இருந்து கற்று வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் எட்டாம் வகுப்பு முடித்த 40 மாணவர்கள் இந்த கல்லூரியில் சேர்க்கப்படுகிறார்கள் என இதன் நிர்வாகி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்ஏகே கல்வி குழுமத்தின் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு மாநில நிர்வாகிகள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்

# பல்லாவரத்தில் மாவட்ட செயற்குழு நடைபெற்றது

பல்லாவரம். ஜூலை.27

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் பல்லாவரத்தில், மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட செயற்குழு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாஹிர் உசேன், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மனிதநேய மக்கள் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் எம்சி, மாநில செயலாளர் சிவகாசி முஸ்தபா, மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர்.புழல் ஷேக் முகமது அலி , ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

செயற்குழுவில் ஜீலை 6 மதுரையில் நடைபெற்ற எழுச்சி பேரணி மாநாட்டிற்கு சிறப்பாக உழைத்த மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், அணி நிர்வாகிகளுக்கு கேடயமும்,கட்சியின் வேட்டியும் கொடுத்து சிறப்பு செய்யப்பட்டது.



மேலும் மதுரையில் எழுச்சி பேரணி மற்றும் மாநாட்டின் தீர்மான விளக்கக் கூட்டங்கள் ஒரே நாள் ஒரே நேரத்தில் மாவட்டம் முழுவதும் 10 இடங்களில் நடத்துவது என்று தீர்மானம் செய்யப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் இளைஞர் அணி மாநில செயலாளர் எஸ்.தமீம் அன்சாரி, வழக்கறிஞர் அணி மாநில செயலாளர், எம்.முஜிபுர் ரஹ்மான், வர்த்தகர் அணி மாநில செயலாளர் ஏ.கௌஸ் பாஷா, MTS மாநில பொருளாளர் ஏ.ஆஷிக் ஹமீது, SMI மாநில பொருளாளர் ஆவடி அப்துல் அஜீஸ், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் ஏ.முகம்மது ஜமீல், SMI சென்னை மண்டல செயலாளர் ஜெய்னுல் ஆபுதீன், மாவட்ட துணைச் செயலாளர் பி.சாகுல் ஹமீது, OKN.அப்துல் காதர், எஸ்கேஎஸ். கபீர் கான், மன்சூர் அலிகான், ஜமால் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இறுதியாக மாவட்டத் துணைத் தலைவர் ஏ.என். அப்துல் ரகுமான் அவர்கள் நன்றி உரையாற்றினார்கள்

# காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், 2025 ஆம் ஆண்டிற்கான நேரடி மாணவர் சேர்க்கை வருகின்ற 31 .7.2025 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.27-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான, நேரடி சேர்க்கை வருகின்ற 31.7.2025 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே உள்ள பொருத்துநர் (Fitter), கடைசலர் (Turner), இயந்திர வேலையாள் (Machinist) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், பற்றவைப்பவர் (Welder), கணினி இயக்குபவர் (COPA) போன்ற ஓராண்டு தொழிற்பிரிவுகளுடன், நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப புதிதாக தொடங்கப்பட்டுள்ள (Industry 4.0 TATA Technology) தொழில் 4.0 மைய தொழிற்பிரிவுகளான அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர் (Basic Designer and Virtual Verifier (Mechanical)), மெக்கானிக் எலக்ட்ரிக் வாகனம் (Mechanic Electric Vehicle) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், தொழில்துறை ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர் (Industrial Robotics and Digital Manufacturing Technician) ஓராண்டு தொழிற்பிரிவுகளும் உள்ளன. அதில், Welder தொழிற்பிரிவை தவிர மற்ற தொழிற்பிரிவில் சேர மாணவர்கள் கட்டாயம் SSLC (10 ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பற்றவைப்பவர் (Welder) தொழிற்பிரிவில் சேர்ந்து கொள்ளலாம்.

மேலும், "தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கை உதவி மையமான" காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர்கள் நேரில் வருகைபுரிந்தும் சேர்க்கை மேற்கொள்ளலாம். அவ்வாறு, சேர்க்கைக்கு வரும்பொழுது, மாணவர்கள் தங்களது நிரந்தர தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, மதிப்பெண் சான்றிதழ் (8th/10th), சாதி சான்றிதழ், மாற்று சான்றிதழ், முன்னுரிமை சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவைகளை உடன் கொண்டு வருதல் வேண்டும்.

அதுமட்டுமன்றி, பயிற்சியின் போது அரசுப் பள்ளியில் படித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும், அரசால் வழங்கப்படும் மாதம் ரூ.1,750/ உதவித்தொகை, இலவச பாடப்புத்தகங்கள், மிதிவண்டி, சீருடைகள், காலணிகள், இலவச பஸ்பாஸ் ஆகியவைகளும் பெற்று வழங்கப்படும். மேலும், பயிற்சியின்போது பிரபல தொழில் நிறுவுனங்களில் பயிற்சியும், பயிற்சி காலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் ரூ.20,000/ சம்பளத்தில் வேலை வாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும்.

நேரடி சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9499055784, 9499055785 ஆகிய அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சங்கரன்கோவிலில் புதிதாக அமையவுள்ள சிப்காட் நிலையத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா நேரில் ஆய்வு

தென்காசி, ஜூலை.27-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் புதிதாக அமையவுள்ள சிப்காட் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



பின்னர் மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை அளித்து வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும். குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டமான தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்தில் சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் சுமார் 3000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் தொழிற்பூங்காவினை சிப்காட் நிறுவனம் மூலம் அமைத்திட அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் சிப்காட் நிலையம் அமைப்பதற்கான முதற்கட்ட பணிகளை துவங்குவதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது , சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஏ.எடிசன் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161